# பூநகரி பாதையை திறக்க பாதுகாப்பு அமைச்சு இணக்கம்?

விலை ரூபா 5-00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 கார்த்திகை 20 இதழ் 305
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 6-12-1994

(கொழும்பு)
பூநகரி — சங்குப்பிட்டி பாதையை மனமின்றி திறப்பதற்கு பாதுகாப்பு அமைச்சு இணக்கம் தெரிவித்துள்ளதாக 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையின் இராணுவ ஆய்வாளர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் இதுபற்றி மேலும் கூறுகையில், இப்பாதை பொதுமக்களின் போக்கு

(4ம் பக்கம் பார்க்க)

## ரத்வத்தையைச் சுற்றி 'கமாண்டோ சுவர்'

(கொழும்பு)
பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தயைச் சுற்றி கமாண்டோ படையினர் மனிதச் சுவர்கள் போல் அவரை பாதுகாத்துவருவதாக 'சண்டேரைம்ஸ்' இராணுவ ஆய்வாளர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளினால் கேணல் அனுருத்த ரத்வத்

(4-ம் பக்கம் பார்க்க)

# அரசுக்கு எதிராக ஐ. தே. கட்சி நம்பிக்கையில்லாப் பிரேரணை

[கொழும்பு]
பொதுசன ஐக்கிய முன்னணி அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவர எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி தீர்மானித்துள்ளதாக 'சண்டே லீடர்' தெரிவித்துள்ளது.

தேர்தல் வன்முறைகளுக்கு எதிராக இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவர கடந்த மாதம் 28ம் திகதி ஐ. தே. க. தீர்மானித்துள்ளது. ஜனாதிபதி சந்திரிகாவுக்கு எதிராக தேர்தல் ஆட்சேபனை மனு கொண்டுவருவதில்லை என தீர்மானித்த பின்பே மேற்படி முடிவு மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ. தே. க வின் இந்த நம்பிக்கையில்லா பிரேரணை மீ

(4ம் பக்கம் பார்க்க)

## முழு யுத்த நிறுத்தத்தை அரசு விரும்பவில்லை?

(கொழும்பு)
சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமரதுங்க தலைமையிலான அரசாங்கம் முழுமையான ஒரு யுத்த நிறுத்தத்தை விரும்பவில்லையென இராணுவ ஆய்வாளர் ஒருவர் 'சன்டேரைம்சில்' கட்டுரை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அவர் அக்கட்டுரையில் மேலும் தெரிவிக்கையில், முதலில் தற்காலிக யுத்த இடை நிறுத்தம் மேற்கொள்ளப்பட

(4-ம் பக்கம் பார்சக)

## புதிய ரஷ்ய ஹெலிகள் பழுது; விமானகொள்வனவில் சர்ச்சை

(கொழும்பு)
ரஷ்யாவிலிருந்து அண்மையில் தருவிக்கப்பட்ட மூன்று ஹெலிகொப்டர்களிலும் ஏற்பட்டுள்ள பாரதூரமான பழுதுகளையடுத்து விமானப் படைக்கு தேவையான விமான கொள்வனவு பற்றிச் சர்ச்சை எழுந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஹெலிகொப்டர்களுக்கான முக்கிய உதிரிப் பாகங்களை வழங்கி பொருத்துவதற்கு உத்தரவாதம் பெறுவதற்காக அந்த ஹெலிகொப்டர் தயாரித்து வழங்கிய சைபீரிய கம்பனிகு விமானப்படை அதிகாரிகள் நால்வர் சென்றுள்ளனர்.

இதேவேளையில் ரஷ்யாவுடன் முன்னைய அரசு மேற்கொண்ட ஏழு கோடி 20 லட்சம் டொலர் பெறுமதியான ஒப்பந்தத்தை இந்த அரசு

(4ம் பக்கம் பார்க்க)

## அரசியல் ஸ்திரத்துக்கு சமாதானம் அவசியம்

— றெனி டி மெல்

(கொழும்பு)
அரசியல் ஸ்திரத்திற்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் இலங்கையில் அவசியம் தேவைப்படுவது சமாதானமே.

முன்னாள் நிதியமைச்சர் திரு. றெனி டி மெல் 'சன்டே லீடர்' நிருபருக்கு வழங்கிய பேட்டி யொன்றில் இவ்வாறு தெரிவிததுள்ளார்.

அவர் தமது பேட்டியில் மேலும் தெரிவிக்கையில் வட

[4-ம் பக்கம் பார்க்க]

## சமாதான முயற்சிகளுககு உலக வங்கி பாராட்டு

(கொழும்பு)
''வடக்கு-கிழக்குப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு தற்போதைய அரசு மேற்கொண்டு வரும் சமாதான முயற்சிகள் பாராட்டப்படவேண்டியவை' இவ்வாறு உலக வங்கியின் தெற்காசிய பிராந்தியத்துக்கான பணிப்பாளர் போல் சிமான் ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா

(4ம் பக்கம் பார்க்க)

## அடுத்த வருடம் பல்கலைக்கழகங்களில் மருத்துவ பீடத்திற்கு கூடுதல்மாணவர் அனுமதி!

(கொழும்பு)
எதிர்வரும் வருடம் பல்கலைக்கழகங்களில் மருத்துவ பீடத்துக்கு கடந்த வருடத்தை விட 80 மாணவர்கள் கூடுதலாக அனுமதிக்கப் படுவார்கள். கல்வி உயர் கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரன இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

கடந்த பல்கலைக்கழக ஆண்டில் 888 மாணவர்கள் பல்கலைக் கழகங்களில் மருத்துவ பீடத்துக்கு சேர்க்கப்பட்டனர் புதிய தீர்மானத்தின் படி இந்த ஆண்டு 970 மாணவர்கள் அனுமதிக்கப்பட இருக்கின்றார்கள்.

(4-ம் பக்கம் பார்க்க)

## கிளாலி-பூநகரி படகுசேவை

(யாழ்ப்பாணம்)
கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று செவ்வாய்க்கிழமை வழமையான நேரத்துக்கு நடைபெறுமென விடுதலைப்புலிகள் அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

## கடற்படைத் தலைமையகத்தினுள் தனியார் வாகனம் நுழையத் தடை!

(கொழும்பு)
கொழும்பிலுள்ள கடற்படைத் தலைமையகத்தினுள் தனியார் வாகனங்கள் நுழைவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த தலைமையகத்தினுள் நுழைவதற்கு இதுவரை 13 தனியார் வாகனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இவற்றின் அனுமதிப் பத்திரங்கள் தற்போது ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

பாதுகாப்பு காரணங்களுக்காகவே கடற்படை தலைமைப் பீடம் இந்தநடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாம்

(4-ம் பக்கம் பார்க்க)

## காமினி கொலை விசாரணைக்கு இந்திய புலனாய்வு குழு கொழும்பு வருகிறது!

(கொழும்பு)
கிராண்ட்பாஸில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு தொடர்பாக விசாரணை நடாத்துவதற்கு இந்திய புலனாய்வுத்துறை அதிகாரிகள்குழு இவ்வாரம் கொழும்பு வரவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

காமினி திஸாநாயக்காவின் கொலை குறித்து விசாரணை நடாத்த இந்திய புலனாய்வு துறையின் உதவியை பெறுமாறு திருமதி ஸ்ரீமா திஸாநாயக்கா அரசை கேட்டுக்கொண்டதற்கிணங்கஇலங்கை அரசும் இந்தியாவிடம் மேற்

(4ம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சித் தேர்தல்கள் மார்ச் மாதம் நடைபெறும்

(கொழும்பு)
நாடு முழுவதிலும் உள்ள மாநகராளு மன்றங்கள், நகராளு மன்றங்கள், பிரதேச சபைகள் ஆகிய 308 உள்ளூராட்சி மன்றங்களுக்கு எதிர் வரும் மார்ச் மாதம் தேர்தல்களை நடாத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் இந்த உள்ளூராட்சி மன்றங்கள் அனைத்தும் கலைக்கப்படும் மார்ச் மாதம் முதல் வாரத்தில் தேர்தல்கள் நடைபெறும்

(4-ம் பக்கம்பார்க்க)

# தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும்

## அரச / அரசசார்பற்ற நிறுவனங்களும்

### இணைந்து நடாத்தும்

# 4ஆவது வதிவிட

# வேளாண்மைப் போட்டி - 1994 - 1995

## யாழ். மாவட்டம்

தமிழீழ விடுதலைப் போராட்டமானது அந்நிய ஒடுக்கு முறைகளிலிருந்து எம மக்களை விடுவிப்பதோடு மட்டும் நிற்கவில்லை. சார்ந்து நிற்கும் பொருளாதார நிலையில் இருந்து தமிழ் மக்களை விடுபடச் செய்து எமது சொந்த மண்ணில் சொந்தக் கால்களில் தங்கி நிற்கும் தன்னிறைவான பொருளாதார வாழ்வை கட்டி எழுப்புவதற்கு வழிவகுத்துள்ளது. இப்பணியில் செயல்பட்டுவரும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன தமிழீழ மக்கள் அனைவருமே இன்று எதிர்கொண்டுள்ள பாரிய பொருளாதார சுமையினின்றும் விடுபட பல்வேறு செயல் திட்டங்களை அறிமுகப் படுத்தி செயல்படுத்தி வருகின்றது. இவ்வாறாக வதிவிட வேளாண்மையில் ஈடுபட்டுள்ள மக்களை ஊக்கப்படுத்தும் முகமாகவும் நான்காவது முறையாக 1994 / 95 காலப் பகுதியில் யாழ். குடா நாட்டிற்குட்பட்ட குடியிருப்பாளர்களை உற்பத்தி முயற்சியில் ஈடுபடவைக்கவும் வதிவிட வேளாண்மைப் போட்டி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

## போட்டிக்கான நிபந்தனைகள்

01. வீட்டுடன் அமைந்துள்ள 4 பரப்பிற்குட்பட்ட காணியில் வேளாண்மை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

02. வீடு அமைந்திருக்கும் வசதிக்கேற்ப வதிவிட பயிர் செய்கையை கவர்ச்சியாக அமைத்தல்.

10 அடி நீளம், 3 அடி அகலமுமான பாத்திகளில் உள்நாட்டு மரக்கறி பயிர்களான வெண்டி, மிளகாய், புசிற்றேவா, பயிற்றை, கத்தரி, புடோல், பாகல், தக்காளி, பீர்க்கு அவரை போன்றவற்றையும் மேல்நாட்டு மரக்கறிப் பயிர்களான போஞ்சி, முள்ளங்கி, பூக்கோவா, பீற்றூட், கரட் போன்ற வற்றையும் இவற்றுள் குறைந்தது ( 5 ) ஐந்து வகைப் பயிரினங் களில் மூன்று உள்நாட்டு மரக்கறிப் பயிர்களும் இரண்டு மேல் நாட்டு மரக்கறிப் பயிர்களும் செய்கை பண்ணப்பட்டு இருத்தல் வேண்டும். அத்துடன் மரவள்ளி, வற்றாளை போன்ற கிழங்கு வகைப் பயிர்களில் ஏதாவது ஒன்று முக்கியமாக நாட்டப்பட்டி ருத்தல் வேண்டும்.

சோளம், கம்பு, இறுங்கு போன்ற தானியப் பயிர்களில் ஏதா வது ஒன்று முக்கியமாக பயிரிடப்பட்டிருத்தல் வேண்டும்.

03. 10 அடி நீளமும், 3அடி அகலமுமான பாத்திகளில் இலைவகைகள் மரக்கறிப் பயிர்களான பொன்னாங்காணி, முளைக்கீரை, பசளி, கங்குன்கீரை, வல்லாரை ஆகியவற்றில் குறைந்தது இரண்டு வகை இருத்தல் வேண்டும். அத்தோடு அகத்தி, முருங்கை, தூதுவளை, சண்டி, முல்லை, முசுட்டை அகியவற்றில் குறைந்தது இரண்டு இனமாவது இருத்தல் வேண்டும்.

04. மஞ்சள், இஞ்சி, பெருஞ்சீரகம், கொத்தமல்லி, வெந்தயம், கருவேப்பிலை, றம்பை போன்ற இனங்களில் மூன்று நாட்டப் பட்டிருத்தல் வேண்டும்.

05. பழமரங்களான பப்பாசி. வாழை, மரக்கொய்யா, தோடை, மாதுளை, கொடித்தோடை, பலா, எலுமிச்சை ஆகியவற் றுள் நான்கு மரங்கள் புதிதாக நாட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

06. பயனுள்ள மரங்களான தென்னை ஒன்று அல்லது கமுகு இரண்டு ஆகியவை புதிதாக நாட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

07. கூட்டெரு குழி முறையிலோ அல்லது குவியல் முறையிலோ மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

08. தேனீவளர்த்தல் குறைந்தது ஒரு பெட்டியிலாவது அல்லது மரக்கொட்டுகளிலாவது வளர்ப்பில் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.

09. கோழி வளர்த்தல் குறைந்தது பத்து கோழிகள் ( கூடு அமைப்பு ) அல்லது கனகூல முறையில் வளர்த்தல் வேண்டும்.

10. தாரா ஒரு சோடி வளர்த்தல் வேண்டும். அல்லது அதற்குப் பதிலாக ஐந்து கோழிகள் கூடுதலாக வளர்க்கப்படல் வேண்டும்.

11. பசுமாடு ஒன்று அல்லது மறியாடு ஒன்று வளர்க்கப்படல் வேண்டும். இவை இரண்டினையும் வளர்ப்பவர்களுக்கு கூடிய புள்ளிகள் வழங்கப்படும்.

12. முயல் குறைந்தது ஒரு சோடி வளர்க்கப்படல் வேண்டும்.

13. விலங்குத் தீவனமாக புல்லினம், இப்பில் இப்பில், முள் முருங்கை, சீமைக்கிழுவை என்பன இருத்தல் வேண்டும்.

14. பதிவேடு பேணல் — மரக்கறிப்பயிர், கால்நடை வளர்ப்பிற் கானவை தனித்தனி பேணப்படல் வேண்டும்.

15. போட்டியாளர்கள் ஒவ்வொருவரும் விறகுத் தேவைக்கான மரங்கள் நட்டுப் பராமரிக்கப்படல் வேண்டும். இதற்கான மரங்கள் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன சூழல் பாதுகாப்பு பகுதியால் இலவசமாக வழங்கப்படும். இதற்கான புள்ளியும் பிரத்தியேகமாக இடப்பட்டு போட்டித் தெரிவில் கணிக்கப்படும்.

## குறிப்பு:

01. மேலதிகமாக தேவைப்படும் விபரங்களை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கோட்ட, வட்ட செயலகங்களின் கிராமிய உற்பத்திக் குழுக்கள், விவசாய போதனாசிரியர்கள், கிராம சேவை அலுவலர்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் ஆகியோரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

02. இப்போட்டியில் கலந்து கொள்வோர் 01 - 10 - 94 தொடக்கம் 31 - 01 - 95 வரையுள்ள காலப்பகுதிக்குட்பட்ட நாட்களில் அனைத்துப் பயிர்களும் நாட்டப்பட்டிருப்பதோடு விலங்கு வேளாண்மை முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 03. போட்டிகள்

## பார்வையிடும் காலம்

★ முதலாம் கட்டம் பார்வையிடுதல்

20 - 01 - 95 தொடக்கம்

31 - 01 - 95 வரை

★ இரண்டாம் கட்டம் பார்வையிடுதல்

15 - 02 - 95 தொடக்கம்

25 - 02 - 95 வரை

★ மூன்றாம் கட்டம் பார்வையிடுதல்

10 - 03 - 95 தொடக்கம்

15 - 03 - 95 வரை

## 04. விண்ணப்பங்கள்

விண்ணப்பப்படிவங்கள் கிராமிய உற் பத்திக் குழு அலுவலகங்களில் கிராம சேவையாளர் அலுவலகங்கள், கமநல சேவைத் திணைக்களம், அரச / அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றில் பெற்று 30 - 12 - 94க்கு முன் மேற்படி விண்ணப்பங்கள் பெற்ற அதே அலு வலகங்களில் நேரடியாக கையளிக்கு மாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(ஏ-4558)

**மணிவாக்கு**

லோபியைப் பணத்தினாலும், சர்வாதிகாரியை வணங்கிக் கும்பிட்டும், முட்டாளை அவன் போகிற வழியிலேயே போயும், பண்டிதர்களை உண்மையான நடவடிக்கைகளினாலும் வழிக்குக் கொண்டுவர வேண்டும்,

— சாணக்கியநீதி.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994—12—06**

**செவ்வாய் இரவு**

08-01 - ஊர்சுற்றும் ஒலி வாங்கி
08-10 - அறிந்து கொள்ளுங்கள் - தகவற்களஞ்சியம்
08-20 - நலந்தானு - நிகழ்ச்சியில் - எயிட்ஸ் என்னும் பயங்கர நோய் வராமல் தடுப்பதற்கு வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் அவர்கள் ஆலோசனை வழங்குவார்,
08-30 - செய்திகள்
08-40 - கருத்துக்களம்- இ. இராஜேஸ்வரன் எழுதிய ''முன்னேற்பாடு''
08-50 - கள்மும் கானமும் எஸ். லாவண்யா எழுதிய ''புரிந்துணர்வு''
09-00 - இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

**1994—12—07**

**புதன் காலை**

07-02 - மாவீர வணக்கம்
07-15 - நீங்கள் கேட்டவை
07-30 - செய்திகள்
07-35 - பத்திரிகைச் செய்திகள்
07-40 - நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி
08-00 - காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

## நமது நோக்கு

### நேபாளத்தில் புதிய ஆட்சி

அண்மையில் நடந்து முடிந்த தேர்தலில் அதிக இடங்களைப் பெற்ற பொதுவுடமைக் கட்சி ஆட்சி அமைத்திருக்கிறது.

அறுதிப் பெரும்பான்மை கிடைக்காவிடினும் சிலகூட்டுக்களை உருவாக்கி ஆட்சிக்கு வந்திருக்கிறது அக் கட்சி,

பொதுவுடமைச் சித்தாந்தம் உலகிலே பூரணமாகப் புதைக்கப்பட்டு விட்டது என எண்ணி மகிழ்ந்திருந்தவர்களுக்கு இது அதிர்ச்சி தந்திருக்கும்.

முதலாளித்துவத்தின் கோரப்பற்களுக்கு இரையாகிய பொதுவுடமைச் சித்தாந்தம் மீண்டும் தலை தூக்குமா?

உலகின் இன்றைய யதார்த்தப் பொருளாதாரப் போக்கினை உணர்ந்திருந்த காரணத்தினுல் ஆட்சிக்கு வந்த கட்சி சந்தைப் பொருளாதாரத்தை ஏற்றுள்ளது.

பிரித்தானியாவிலும் சோசலிசத்தை ஏற்றுள்ள தொழிற்கட்சி மீண்டும் ஆட்சிக்கு வரக்கூடும் என அரசியல் ஆய்வாளர்கள் கணித்துள்ளார்கள்.

அதேபோல் - முன்னைய சோவியத் ஒன்றியத்திலிருந்து பிரிந்து சென்ற நாடுகளிலும் சோசலிசக் கருத்துக்கு ஆதரவுதரும் தலைவர்களே மக்களிடம் செல்வாக்குப் பெற்று வருகிறுர்கள்.

அண்மையில் - ஜேர்மனியில் நடந்து முடிந்த தேர்தலில் வலதுசாரி ஆளும் கட்சியின் வாக்குப் பலம் குறைந்ததும் கவனத்துக்குரியது.

நேபாளத்தில் - ஆட்சியிலிருந்த காங்கிரஸ்கட்சி செல்வாக்கிழந்ததற்கு வேறு காரணங்களும் கூறப்படுகின்றன.

அக் கட்சி இந்தியாவின் சார்பாக நடந்து வந்தது என்பதும் ஒரு காரணம்.

இந்தியா—சீனு ஆகிய இரு பெரும் நாடுகளுக்கிடையே இருக்கும் நேபாளம் உலகிலேயுள்ள மிக வறுமையடைந்த நாடுகளில் ஒன்று.

தான் வறுமைப்பட்ட நாடாக இருப்பதன் காரணமென்ன, இரு பெரும் நாடுகளும் தரும் அழுத்தங்கள் ஏன் என்பதை சிந்திக்கத் தொடங்கியதால் ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது.

மன்னராட்சியினைக் கட்டுப்படுத்தி மக்கள் ஆட்சியை மலரச் செய்வதற்காகப் போராடி, 15 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்த தலைவர் தலைமையில் புதிய ஆட்சி உருவாகியுள்ளது.

இதனுல் - அண்டை நாடுகளுடன் இந்தியா கொண்டிருக்கும் நல்லுறவுக் கொள்கைகள் மீள் பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டி வரும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1994 டிசம்பர் 30ம்ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் என்னுல் பெற்றுக்கொள்ளப்படும்.

### பதவிகள்

உதைப்பந்தாட்டம் வலைகோற்பந்தாட்டம்/கூடைப்பந்தாட்டம்/மேசைவரிப்பந்தாட்டம் / பூப்பந்தாட்டம்/மெய்வல்லுநர் பயிற்சிகள்/உடற்பயிற்சி விளையாட்டுக்கள்/சதுரங்கம் /கராட்டி / துடுப்பாட்டம் / வரிப்பந்தாட்டத்தில் இடைவரவுப் போதனுசிரியர்.

### கொடுப்பனவு விகிதம்;

மணித்தியாலம் ஒன்றிற்கு 75/- ரூபா [மாதமொன்றுக்கு 900/-ரூபா உச்ச வரம்பிற்கு உட்பட்டு)

### தகைமைகள்:

(1) தேசிய அணியொன்றையோ மாவட்ட அணியொன்றையோ தேசியப்பாடசாலை அணியொன்றையோ இணைந்தபாடசாலை அணியொன்றையோ பிரதிநிதித்துவப்படுத்தியிருத்தல் வேண்டும்.

அல்லது

(2) மாவட்ட அணியையோ மாவட்ட இணைந்த அணியையோ மூன்றுண்டுகளுக்குக் குறையாத காலத்திற்கு பயிற்றியிருத்தல் வேண்டுல்.

அல்லது

(3) விளையாட்டுத்துறை அமைச்சினுல் நியமிக்கப்பெற்ற பயிற்றுனராக குறைந்த பட்சம் மூன்றுண்டுகளுக்குப் பயிற்றுதலில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(4) பல்கலைக்கழக மட்டத்தில் விளையாட்டுக்களைப் பயிற்றுதலில் அனுபலம் உடையவராயிருத்தல் வேண்டும்.

அல்லது

(5) பாடசாலை ஒன்றில் அல்லது களரியொன்றில் ஐந்தாண்டுப் பயிற்றுதல் அனுபவத்துடன் குறைந்த பட்சம் மூன்றுண்டுகளுக்கு மாவட்ட விளையாட்டு சங்கத்தினுல் நடாத்தப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுப்போட்டியொன்றில் வீரமுதல் வரை அல்லது இரண்டாம் இடத்தைப்பெற்றவரை உருவாக்கியிருத்தல் வேண்டும்.

ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்திற்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கியில் அல்லது நிதிக்கிளையில் சிறுப்பரின் முகப்பு மேசையில் 20/- ரூபாவைச் செலுத்தி இப்பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளையின் சிரேஷ்ட உதவிப்பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் விண்ணப்பிக்க வேண்டும் தபால் மூலம் படிவங்களையும் இதர விபரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதிவாளர்/நிதியாளர் பெயரில் பெறப்பட்ட காசுக்கட்டளை/தபாற் கட்டளையொன்றை 23X 10 ச. மீ. அளவுடைய சுயமுகவரியிட்ட 1/- ரூபா முத்திரையொட்டப்பெற்ற கடித உறையுடன் அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத்திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள்,நியதிச் சட்டசபைகளிருந்து அனுப்பப்படும் விண்ணப்பங்களை அந்நிறுவனங்களின் தலைவர்களின் மூலம் அனுப்புதல் வேண்டும்.

விதிக்கப்பெற்ற படிவத்தில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்ப முடிவு தேதியின் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்களும் தெளிவில்லாமல் விபரங்கள் எழுதப்பட்ட விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

குறிப்பு: சான்றிதழ்களின் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்தனுப்பப்படல்வேண்டும்.

பதிவாளர்,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
யாழ்ப்பாணம்.
1994-12-01 (எ 4562)

## இராசி பலன்

**06 - 12 - 1994**

**செவ்வாய்க்கிழமை**

**(தமிழுக்குகார்த்திகை20)**

சதுர்த்தி காலை 9-52 வரை உத்தராடம் அதிகாலை 10-06 வரை சித்தயோகம் இராகு காலம், மாலை 3-16 முதல் 4-32 வரை சுபவேளை காலை 9-24 முதல் 10-34 வரை

மேடம், சாதுரியம், குடும்ப சுகம், தொழில் மேன்மை,

இடபம்: பிடிவாதம்,காரிய தாமதம், அலைச்சல்.

மிதுனம்; வீண் [யோசனை. நீசர் நட்பு, துயரம்.

கடகம்: நல்லுறவு, வசீகரம், தொழில்

சிங்கம்; ஜனவசியம், மேலானநிலை, பணவரவு.

கன்னி: தனசிந்தை, கடின வாக்கு, மனவேதனை.

துலாம்: புண்ணிய காரிய செலவு, வீண்பகை, அகால உணவு.

(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**கணிதம் 6—G.C.E. O/L**

தனிப்பட்ட முறையில் மேற்படி வகுப்புகளுக்கு அனுபவம் பெற்ற ஆசிரியரினுல் கணிதம் சிறப்பாகப்பயிற்சிகளோடு கற்பிக்கப்படும். R. பாலசுப்பிரமணியம் B. Sc. (Cey), 17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (சி-1338)

**அக்கரைச் சீமையில் நாவல்**

இது ரமணிச்சந்திரன் நாவலல்ல. 250 நாடகங்கள் எழுதிய அராலியூர் சுந்தரம் பிள்ளையின் யதார்த்தமான நாவல். இங்கிலாந்து சென்ற எங்கள் இளசுகளின் கதை.. (சி-1326)

**வைத்தியம்**

செங்கண்மாரி (Hepatitis) இரப்பை அல்சர், ஆஸ்மா மூட்டுவாதரோகங்கள் வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலை காலவியல், சருமநோய்கள், மாதவிடாய்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2ம் குறுக்கு வீதி, பறங்கித்தெரு, யாழ்ப்பாணம். (சி-1313)


நத்தார் - புதுவருடத்தை முன்னிட்டு
5-12-94 தொடக்கம் 31-12-94 வரை

**மலிவு விற்பனை**

★ சகலவிதமான புடவைகளுக்கும் விசேட கழிவுண்டு,

வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகிறேம்.

**லைடன் புடவை நிலையம்**

[தீவகம்]
249, இராசன் வீதி [மின்சாரநிலைய வீதி]
யாழ்ப்பாணம்.

(எ-4566)



யாழ். வண்ணை ஸ்ரீவைத்தீஸ்வரன் கோயில்
(வண்ணை சிவன் கோயில்)
விநாயக விரத 20ம் நாள்
07-12-1994 புதன்கிழமை

**கஜமுகாசுர சங்காரம்**

மங்கள இசை பி. ப. 4-00 மணி

| நாதஸ்வரம் | தவில் |
|---|---|
| கே. கணேசன் | கே. வீராச்சாமி |
| எஸ். சிதம்பரநாதன் | ரி. உதயசங்கர் |
| ஆர். கேதீஸ்வரன் | ரி. முருகதாஸ் |

★ மாலை 5-00 மணி வசந்தமண்டபப் பூசையாகி விநாயகப் பெருமான் சங்காரஞ்செய்யப் புறப்படல்.

தேவஸ்தானம்.

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் கோயில்
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(எ-4567)


நல்ல தண்ணீர் என்று பெற்றிடவே-நாம்
நல்ல மரங்கள் நட்டிடுவோம்.

# சமாதான முயற்சிகளை அரசு தொடர்ந்தும் முன்னெடுக்கும்

## அமைச்சர் கதிர்காமர் தெரிவிப்பு

(டாக்கா)

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த இலங்கையின் புதிய அரசாங்கம் அனைத்து ஏற்பாடுகளையும் செய்கின்றது. ஆனால் சமாதானத்தைக் காண்பது என்பது ஒரு எளிதான காரியமல்ல.

இவ்வாறு இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், நேற்று பங்களாதேஷின் தலைநகரான டாக்காவில், பத்திரிகையாளர் மத்தியில் தெரிவித்தார்.

அமைச்சர் கதிர்காமர் இது பற்றி மேலும் தெரிவிக்கையில்,

விடுதலைப்புலிகளுடன் சமாதான முயற்சிகளை மேற்கொள்ள, எமது அரசாங்கம் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

ஆனால், அமைதி முயற்சியைக் காண்பது அவ்வளவு எளிதான காரியமல்ல என்றார்.

தமிழ் தீவிரவாதிகளை இந்தியா ஆதரிக்கின்றதா? என்று பத்திரிகையாளர்கள் கேட்டபோது ''அவ்வாறு எண்ணுவதற்கே இடமில்லை'' என்றும் அமைச்சர் பதிலளித்தார்.

பங்களாதேஷில், அமைச்சர் கதிர்காமர், உயர் அதிகாரிகளையும், அமைச்சர்களையும், எதிர்க்கட்சித்தலைவர்களையும், முக்கிய வர்த்தக பிரமுகர்களையும் சந்திக்க விருப்பதாகவும் சமாதான முயற்சிகள் பற்றி அவர்களுக்குவிரிவாக அமைச்சர் எடுத்து விளக்குவார் எனவும் தெரிவிக்கப்பட்டது. வி.இ

## கோமாரியில் 184 தபால் பொதிகள் வந்தன

(நெல்லியடி)

கோமாரி கப்பல் நேற்றுக் காலை பருத்தித்துறைத் துறைமுகத்தை வந்தடைந்தது.

இக்கப்பலில் 184 தபால் பொதிகளும், இடம் பெயர்ந்தோருக்கான நிவாரணப் பொருட்களான அரிசி, மா, சீனி ஆகியனவும் எடுத்துவரப்பட்டன.

தபால்கள் இன்று விநியோகிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடல் கொந்தளிப்பிருந்தும் இறங்குதுறையில் பொருட்களை இறக்கும் பணி, உடன் ஆரம்பமாகியது. 160-இ

## மல்லியின் (தலை) அஸ்தி புலிகளிடம் கையளிப்பு?

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் முக்கிய தளபதிகளில் ஒருவரான லெப். கேணல் மல்லியின் தலையை எரித்து, அந்த அஸ்தியைப் படையினர் வவுனியாவில் வைத்து விடுதலைப் புலிகளிடம் கொடுத்தபோதும், அதனை ஏற்றுக்கொள்ளப் புலிகள் மறுத்துவிட்டனராம்.

எனினும் 'மல்லி'யின் கொலை குறித்து விசாரணை செய்வதற்கு இணக்கம் தெரிவித்து, இராணுவத் தலைமைப் பீடம் விடுதலைப் புலிகளுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளதாம்,

லெப். கேணல் மல்லியின் தலையைத் துண்டித்ததற்குக் காரணமான படையினர் (அதிகாரிகள்) மீது நடவடிக்கை எதனையும் இராணுவத் தரப்பினர் எடுக்கமாட்டார்கள் எனக் கருதப்படுகிறது. ஏனெனில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக மோதல்களை நிறுத்துமாறு இராணுவத்தினருக்குப் பணிப்பு எதுவும் அரசினால் வழங்கப்படவில்லை எனப் பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க கூறியுள்ளார். சி-இ

### காமினி கொலை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

படி கோரிக்கையை விடுத்திருந்தது.

இக்கோரிக்கையை பரிசிலித்த இந்திய அரசு இவ்வாரம் தமது புலனாய்வுதுறை பிரிவொன்றைமேறபடி குண்டு வெடிப்பு தொடர்பாக விசாரணை நடாததுவதற்கு இவ்வாரம் அனுப்பி வைக்கவுள்ளதாம். (சி-இ)

### ரத்வத்தையைச்

1ம் பக்கத் தொடர்ச்சி)

தைக்கு தொடர்ந்தும் அச்சுறுத்தல் இருப்பதாக புலனாய்வு துறையினர் எச்சரித்ததை அடுத்து வழமையான மெய்ப்பாதுகாப்பாளர்களைவிட அவருக்கு அதிவிசேட கமான்டோ படையினரின் தீவிர பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாம்.

சேணல் ரத்வத்த பொது மக்கள் முன்னிலையில் செல்கையில் கமாண்டோ சீருடை தரித்தவர்கள் இந்த பாதுகாப்பை வழங்குகின்றார்கள். சாதாரண வைபவங்களுக்கும் இராஜ தந்திரிகளை மற்றும் உயர் அதிகாரிகளை சந்திக்கச் செல்கையிலும் இந்த பாதுகாப்பு வழங்கப்படுகிறதாம். தற்போது கேணல் ரத்வத்தயும் மிகுந்த அவதானமாயிருப்பதாகவும் தெரிவிககப்படுகிறது. (சி - இ)

### சமாதான

[1ம் பக்கத் தொடர்ச்சி]

குமாரதுங்காவிடம் கூறியுள்ளார்.

உலகவங்கிதெற்காசியாக்குழுவினர் அண்மையில் ஜனாதிபதி சந்திரிகாவை அலரிமாளிகையில் சந்தித்து உரையாடிய போது, எதிர்வரும்ஐந்துவருட காலத்தில் இலங்கையின் பொருளாதாரத் திட்டத்துக்கு தற்போது வழங்கப்படும் நிதி உதவியைவிட, கூடுதலாக உதவி வழங்கப்படுமென்று திரு. போல்சிமான் உறுதியளித்தார். (வி-ரி)

### உள்ளூராட்சித்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எனத் தெரியவருகிறது.

கடந்த இரு தேர்தல்களிலும் பொதுசன ஐக்கிய முன்னணி வெற்றி பெற்றதன் காரணமாக, இந்த உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக் காலம் முடிவடைவதற்கு முன்னரே அவற்றைக் கலைத்து விட்டு, தேர்தல்களை நடாத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையின் கீழுள்ள ஐக்கிய தேசியக் கட்சி எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் வெற்றி பெறுவதற்குத் தனது முழுச் சக்தியைப் பிரயோகிக்க இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. கேம இ

### கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

'ஆரம்ப சுகாதாரமும் ஆரோக்கியமும்' என்ற விடயம் தொடர்பான கருத்தரங்கு அரியாலையில் இன்று செவ்வாய்க்கிழமை பி. ப. 1-30 மணிக்கு நடைபெறும்.

### யாழ்: பல்கலைக் கழக சபை உறுப்பினராக நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக் கழக சபை உறுப்பினராக திருநெல்வேலி வடக்கைச் சேர்ந்த திரு. அருணாசலம் முத்துக்கிருஷ்ணன் கடந்த நவம்பர் 7ம் திகதியிலிருந்து 3 வருட காலத்திற்கு பல்கலைக் கழக மானிய ஆணைக் குழுவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

### வி.பி. சிங் ராஜினமா

(புதுடில்லி)

இந்தியாவின் முன்னாள் பிரதமரும் ஜனதா தள் தலைவர்களில் ஒருவருமான திரு. விஸ்வநாத் பிரதாப் சிங் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து நேற்று ராஜினமா செய்தார்.

மக்களவை தலைவர் சிவராஜ் பாட்டேலிடம் தமது ராஜினமாக் கடிதத்தை வி. பி. சிங் சமர்ப்பித்தார் என அறிவிக்கப்படுகிறது.

இவரது ராஜினமாவுக்கான காரணம் குறித்து எதுவித தகவலும் தெரிவிக்கப்படவில்லை, (க)

### கடற்படைத்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படைத்தலைமையகங்களை புலிகளின் தற்கொலைப்படையினர் தாக்கலாமென்று புலனாய்வுத்துறை எச்சரித்திருந்தது.

இந்தத் தவிர கடற்படைத் தலைமையகத்தின் பாதுகாப்பு வேறு வழிகளிலும் பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சி-இ

### அரசுக்கு எதிராக

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. தேர்தல் காலத்திற்கு முன்பான வன்முறை, மற்றும் குற்றச் செயல்கள் தொடர்பாகவும் பொ. ச. மு. அரசு கண்டனமும், கடும் நடவடிக்கையும் எடுக்கப்போவதாகவும் தெரிவித்துள்ள இவ்வேளையில் ஐ. தே. க. இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கொண்டு வரவுள்ளதாம். [சி-இ]

### பூநகரிப் பாதையை

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வரத்து பாதைக்காக திறக்கப்படும்போது அங்கிருந்து படையினர் விலகமாட்டார்கள் எனவும், அங்குள்ள படைமுகாம் தொடர்ந்து இருக்குமெனவும் தெரிவிக்கப்படுகிறது

பாதுகாப்பு அமைச்சக அதிகாரிகள் இதுபற்றி ஜனாதிபதிக்கு கூறுகையில், பூநகரி பாதையை திறப்பதைவிட ஆனையிறவு பாதையை திறப்பதே மேலானது எனத் தெரிவித்துள்ளனர்.

ஏனெனில் பூநகரி இராணுவ முகாமை புலிகள் தாக்குவதைவிட ஆனையிறவு இராணுவ முகாமை புலிகள் தாக்குவது கடினம் என்பதேயாகும் எனவும் அந்த ஆய்வாளர் குறிப்பிட்டுள்ளார். (கே-சி-இ)

# படகுமீது ராணுவம் சூடு 7 பேர் பலி

(மணிலா)

படகு ஒன்றில் பயணம் செய்த பொதுமக்கள் மீது இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தினால், குறைந்தது 7 பேர் கொல்லப்பட்டதாகக் கொழும்பு இராணுவ வட்டாரங்களை ஆதாரம் காட்டி வெரித்தாஸ் தெரிவித்தது.

விடுதலைப் புலிகள் என்று நினைத்தே, தாம் படகில் சென்றவர்கள் மீது தாக்குதல் நடத்தியதாக இராணுவம் தெரிவித்தது.

மேலும் உயிரிழந்தவர்கள் அனைவரும் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் எனக் கூறி, இராணுவம் தனது செயலை நியாயப்படுத்தப்பார்க்கிறதாகவும் அச்செய்திகள் தெரிவித்தன. க-இ

# புலிகள் தாக்கு 2 பொலிஸார் பலி

(மணிலா)

அம்பாறையில் பொலிஸ் நிலையம் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில், இரு பொலிசார் கொல்லப்பட்டதாகப் பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் நேற்றுத் தெரிவித்தது.

புலிகள் எறிந்த வெடிகுண்டினால் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார் என்றும், இரு சிப்பாய்கள் காயமடைந்தனர் என்றும் வெரித்தாஸ் மேலும் தெரிவித்தது. க-இ

# புலிகளின் ஆயுதக் கப்பல் அட்லாண்டிக்கில் சஞ்சரிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கு ஆயுதங்களைக் கொண்டுவருவதாக கூறப்படும் கப்பல் இப்போது அடையாளம் காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக்கப்பலின் பெயர் 'ஸ்வீனி' Sweenee என தெரியவந்துள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தக்கப்பல் முதலில் அட்லாண்டிக் சமுத்திரத்தில் காணப்பட்டது. சில தினங்களுக்குமுன் இது ஆபிரிக்காவின் வடபகுதிக் கடலில் பயணம் செய்ததாக தகவல் கிடைத்துள்ளதாகவும் இராணுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஸ்வீனி என்ற இந்தக் கப்பல் இந்து சமுத்திரத்துக்கு வந்து இலங்கைக் கடற்பகுதிக்குள் பிரவேசிக்க இருந்ததாம்.

எனினும் கம்பல் பற்றிய தகவல்கள் கிடைக்கப்பெற்றதும் அது மீண்டும் அட்லாண்டிக் சமுத்திரத்துக்கு சென்றுவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய கடற்படையினரும் இலங்கை கடற்படையினரும் இந்த கப்பல் குறித்து மிகவும் விழிப்பாக உள்ளனர்.

ஆயுதங்களும், விமானத்தின் பகுதிகளும் இந்தக் கப்பலில் கொண்டுவரப்படுவதாக கூறப்படுகிறது. (இ)

# பிரதேச செயலர்களுக்கு புதிய பொறுப்புகள்

(யாழ்ப்பாணம்)

அரசாங்கத்தின் புதிய அதிகாரப் பரவலாக்கலுக்கமைய, அடுத்த ஆண்டு ஜனவரி முதல் சகல பிரதேசச் செயலர்களும் உதவி உள்ளூராட்சி ஆணையாளர்களாகவும், உதவி உணவுக் கட்டுப்பாட்டாளர்களாகவும் நியமனம் பெறவுள்ளனர்.

இந்நடவடிக்கையால் ஒவ்வொரு மாவட்டங்களிலும் உணவுக் கையிருப்பு உட்பட்ச் சகல நிர்வாக விடயங்களிலும் சிரான நிலை உருவாகும்

இவ்வாறு யாழ். பிரதேசச் செயலர்கலாநிதி க.குணராசா யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையால் ஏற்பாடு செய்யப்பட்ட, யாழ். மாவட்டக் கூட்டுறவுப் பெரியார் அமரர் வீரசிங்கம் ஞாபகார்த்த நினைவு தின விழாவில் தெரிவித்தார். 162-இ

### சிமெந்து ஊழியர் சம்பளம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்களின் நவம்பர் மாதச் சம்பளக் கொடுப்பனவுகள், இன்றும் நாளையும் காலை 9-00 மணி முதல் நண்பகல் 12-00 மணி வரை யாழ்ப்பாணம் வர்த்தக வங்கியில் வைத்து வழங்கப்படுமெனக் கூட்டுத்தாபனக் கணக்காளர் அறிவித்துள்ளார்

### புதிய ரஷ்ய

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பதவிக்கு வந்ததும் ரத்து செய்தபின் மூன்று விமானங்களும், 6 ஹெலிகொப்டர்களுக்கும் விமானப்படை கேள்விப்பத்திரம் கோரியுள்ளது. கே-இ

### இராசி பலன்

[3ம் பக்கத் தொடர்ச்சி]

விருச்சிகம், முதியோர் ஆசி ஆடம்பரம், பயணநன்மை.

தனுசு: நிம் தியின்மை விரோதித்தல், காரியதடை.

மகரம்; ஆழ்ந்தசிந்தனை, பிதாநல்மை, தானதர்மம்.

கும்பம்: அதிகாரிகள் துயர், ஏமாற்றம், கடித விவகாரம்,

மீனம்: அதிக உழைப்பு வாக்குவன்மை, தொழில் பாராட்டு.

ஜோஸ்யர்

### அடுத்த வருடம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சட்டம், கலை, பல்மருத்துவம், விவசாயம்; பொறியியல் ஆகிய துறைகளுக்கும் மாணவர்களை கூடுதலாக அனுமதிப்பதற்கும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. (ம - சி)

### முழு யுத்தநிறுத்தத்தை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் என்றும் யுத்த இடைநிறுத்தத்தை அகதிகளுக்கான ஐ. நா. உயர்ஸ்தானிகராலய பிரதிநிதிகள் கண்காணிப்பதில் அரசாங்க வட்டாரங்கள் ஆர்வம் கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கிறார்.

### அரசியல்யஸ்திரத்துக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

க்கு-கிழக்கு போர் இருக்கும் வரை நாம் என்ன தான் சொன்ன போதும் வெளிநாட்டு மூலதனமிடுவோர் இங்கு முதலீடு செய்வதற்கும் வருவதற்கும் தயக்கம் காட்டுவர்.

சமாதான முயற்சியில் ஈடுபட்டதால் நான் நான்கு முறை பாதிப்புக்கு இலக்கானேன். எனது வீடுகூட சேதமபக்கப்பட்டது. எனினும் நான் எப்போதும் சமாதானத்தையே விரும்பினேன். அதையே நான் மீண்டும் விரும்புகிறேன் என்று மேலும் கூறினர். (கே-இ)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994-ம் ஆண்டு டிசம்பர் மாவம் 06-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Number B/16336/B-